**CC 119/2009 Dt:20.12.2024 விசாரணை ஆரம்பிக்கும் நேரம்: 04.55**

**அ.சா.2 எஸ்என்எம். இஸ்மயில், த.பெ. நைனார் முகமது மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு 2,3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

1, நான் கோரிக்கை செய்யும் இடத்தின் சர்வே எண். 31/1 ஆகும். அதன் மொத்த விஸ்தீர்னம் 6 ஏக்கர் 44 செண்ட். இந்த சொத்தின் உரிமையாளர் சேவுகன் செட்டியார் மற்றும் 3 பேரிடமிருந்து பொது அதிகார பத்திரம் பெற்றுள்ளேன். அந்த 3 நபர்களின் பெயர் என்ன என்றால் அவர் பெயர் சொல்ல முடியாது. ஞாபகமில்லை. வகையறா என்று தான் சொல்ல முடியும். சேவுகன் செட்டியார் வகையறாவுக்கு சொத்து எவ்வாறு கிடைத்தது என்றால் இம்பிரியல் பேங்க் ஏலத்தின் மூலமாக அவர்களுக்கு கிடைத்தது. இம்பிரியல் பேங்கில் எந்த எந்த சொத்துக்கள் ஏலம் விட்டார்கள் என எனக்கு தெரியாது. எந்த வருடம் ஏலம் எடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது. ஏலம் எந்த வகையில் நடந்தது என்று எனக்கு தெரியாது. என்ன என்ன சொத்துக்கள் ஏலம் போனது என்று தெரியாது.

2. நான் ஏலம் போனதாக சொல்லப்பட்ட சொத்துக்களின் ஆவணங்களை சரிபார்த்து பவர் ஆவணம் எழுதி வாங்கினேன். நான் எந்த வகையில் இந்த சொத்தை பவர் ஆவணம் பெற்றேன் என்றால் சர்வே எண்.31/1 மற்றும் 31/2 சம்மந்தப்பட்ட மூல ஆவணங்களை பார்வையிட்டு தான் வாங்கினேன். அந்த ஆவணங்கள் கிரைய ஆவணம், ஏல ஆவணம் மற்றும் பட்டா, சிட்டா, அடங்கல் ஆகியவற்றை பார்வையிட்டேன். சேவுகண் செட்டியார் நீதிமன்ற ஏலத்தில் எடுத்தாரா அல்லது தனிநபர் ஏலத்தில் எடுத்தாரா என்று எனக்கு தெரியாது. ஏலம் சம்மந்தமாக வழக்குகள் நடந்ததா என்று எனக்கு தெரியாது. சர்வே எண்.31/1 மற்றும் 31/2 அமைந்துள்ள இடம் ராமப்பா தோட்டம் என்றால் சரியல்ல. அதை ராமசாமிபேட்டை என்று சொல்வார்கள் என்றாலும் இல்லை. இந்த சொத்து தஞ்சாவூர் நகராட்சியின் எல்லைக்கு உட்பட்டது. தஞ்சாவூர் நகராட்சி எத்தனை கிராமங்களுக்கு உட்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சர்வே எண்.31/1 மற்றும் 31/2 புதுப்பட்டினம் வட்டத்திற்கு உட்பட்டது என்றால் சரிதான். புதுப்பட்டினம் புதுப்பட்டினம் வட்டம் மற்றும் புதுப்பட்டினம் கிராமம் என இரண்டாக உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. புதுப்பட்டினம் வட்டம் தஞ்சாவூர் நகராட்சி எல்லைக்குள் உள்ளது என்றாலும், புதுப்பட்டினம் கிராமம் என்பது நகராட்சிக்கு வெளியே உள்ளது என்றாலும் எனக்கு தெரியாது. சர்வே எண்.31/1 மற்றும் 31/2 புதுப்பட்டினம் டவுன் எல்லையிலும், புதுப்பட்டினம் கிராம எல்லையிலும் தனித்தனியாக உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இவ்வழக்கில் நான் குறிப்பிட்டுள்ள 31/1 மற்றும் 31/2 ஆகியவை புதுப்பட்டினம் கிராம எல்லைக்கு உட்பட்டது என்றால் சரியல்ல, அவை டவுன் எல்லையில் உள்ளது. புதுப்பட்டின கிராமத்தில் உள்ள சர்வே எண்.31/1 மற்றும் 31/2 ஆகியவற்றை சேர்வகன்செட்டியார் வகையறா ஏலத்தில் எடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. மேற்படி சொத்து தஞ்சாவூர் சார்பு நீதிமன்ற அசல் வழக்கு எண். 21/1936 வழக்கின் அடிப்படையில் ஏலம் விடப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சர்வே எண்.31/1 மற்றும் 31/2 சம்மந்தமான ஆவணங்களை உரிமையாளரிடமிருந்து நான் வாங்கி உள்ளேனா என்றால் வாங்கி உள்ளேன். அந்த ஆவணங்களை பார்த்தால் சேர்வகன் செட்டியார் வாங்கிய சொத்து புதுப்பட்டினம் கிராமத்தில் உள்ளதா, புதுப்பட்டினம் டவுனில் உள்ளதா என்பது தெரிய வரும் என்றால் சரிதான். புதுப்பட்டினம் டவுனில் உள்ள சர்வே எண்.31/1 மற்றும் 31/2 சந்தாஉசேன் தைக்காலுக்கு சொந்தமானது என்றால் சரியல்ல.

சர்வே எண்.31ல் 6 ஏக்கர் 20 செண்ட், சர்வே எண்.32–ல் 1 ஏக்கர் மற்றும் சர்வே எண்.33–ல் 4 ஏக்கர் 72 செண்ட் என ஒரே இடத்தில் உள்ளது என்றால் சரியல்ல. சர்வே எண்கள்.31 வடபுறத்திலும், 32, 33 தென்புறத்திலும் உள்ளது என்றால் சரிதான். மேற்படி மூன்று சர்வே எண்களும் மராட்டிய மன்னர்களுக்கு சொந்தமானது என்றால் எனக்கு தெரியாது. மராட்டிய மன்னர்களால் மேற்படி சர்வே எண்கள் சந்தாஉசேன் தைக்காலுக்கு இனாமாக கொடுக்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மராட்டியர்களின் கடன்தொகைக்காக சர்வே எண்.31 ஏலத்தில் விடப்பட்டது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. வக்ப் வாரியத்திலிருந்து அந்த சொத்துக்களை அளக்க வந்தார்கள் என்றால் சரிதான். வக்ப் வாரியத்திலிருந்து அளப்பதற்காக சூப்பரண்டன்ட் மற்றும் ஆய்வாளர் ஆகியோர் வந்தனர் என்றால் சரிதான்.

3. என்னிடம் காண்பிக்கப்படும் அ.சா.ஆ.22 தான் வக்ப் வாரியத்திலிருந்து வந்தவர்கள் காட்டியது என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் மு.இஸ்மாயில் என்பவர் மாவட்ட ஆட்சியருக்காக கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான், ஆனால் அந்த நபர் அவ்வாறு கையொப்பம் செய்யவில்லை என சொன்னார். மு.இஸ்மாயில் என்பவர் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையில் தலைமை அதிகாரியாக இருந்தவர் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. எனது ஆட்சேபனை என்னவென்றால் அ.சா.ஆ–22 மாவட்ட ஆட்சியருக்காக மு.இஸ்மாயில் என்பவரால் கொடுக்கப்பட்டது இல்லை என்றால் சரிதான். மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மு.இஸ்மாயில் என்ற அதிகாரி வேலை செய்யவில்லை என சொல்கிறேனா என்றால் ஆமாம். மு.இஸ்மாயில் என்ற அதிகாரி மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையில் அதிகாரியாக 21.03.2003 முதல் 23.08.2004 வரையில் பணியாற்றியுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மு.இஸ்மாயில் அதே காலக்கட்டத்தில் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையிலிருந்து வருவாய் கோட்டாட்சியராக பணியாற்றியுள்ளார் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது.

4. வக்ப் சம்மந்தமான சொத்துக்கள் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையில் பராமரிக்கப்படும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1995, 1996 காலகட்டத்தில் ஆக்கிரமிப்பில் இருந்த வக்ப் சொத்துக்களை மீட்பதற்காக சர்வே நடத்தப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அதை சர்வே நடத்துவதற்காக மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அதிகாரி தலைமையாக இருந்தார் என்றால் அது பற்றி தெரியாது.

**(நீதிமன்ற கால அவகாசம் கருதி குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகின்றது)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு. சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

(ஒப்பம்/–திருமதி.எஸ். சுசிலா),
நீதித்துறை நடுவர் எண்–I,
தஞ்சாவூர்.